Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

FRIDAY, DECEMBER 08, 2023

வெள்ளிக்கிழமை டிசெம்பர் 08, 2023 | ஒளி: 09 கதிர்: 145 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## எகிறியது தங்கம்



உள்ளூர் தங்க சந்தையில் தங்கத்தின் விலை வியாழக்கிழமை (7) மேலும் அதிகரித்துள்ளதாக உள்ளூர் தங்க வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
22 கெரட் தங்கம் ஒரு பவுன் விலை 173,000 ரூபாவாகவும், 24 கெரட் தங்கத்தின் விலை 189,000 ரூபாவாகவும், ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 668,000 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக தங்க வர்த்தகர்கள் தெரிவித்தனர்.



## 2 சிசுக்களை விற்ற தாய்; வாங்கிய 2 பெண்கள் கைது

பிறந்து நான்கு நாட்களேயான இரண்டு சிசுக்களை விற்பனைச் செய்த இளம் தாய், அவ்விரு சிசுக்களையும் விலைக்கு வாங்கிய இரண்டு பெண்கள், வியாழக்கிழமை (07) காலை கைது செய்யப்பட்டுள்ளதாக ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவரும், இரண்டு சிசுக்களையும் தலா 25,000 ரூபாய்க்கு வாங்கிய இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் இரட்டை சிசுக்களில் ஒன்றை வாங்கிய பெண்ணொருவர் ராகம பிரதேசத்திலும் மற்றைய சிசுவை விலைக்கு வாங்கிய பெண், களனி பிரதேசத்திலும் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம பிரதேசத்தில் வீட்டு வேலை செய்து வந்த குறித்த இளம் தாய் கொழும்பு காசல் மகப்பேறு வைத்தியசாலையில் முன்னர் இரட்டைக் சிசுக்களைப் பெற்றெடுத்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

தனியார் துறையினருக்கும்

# “சம்பள அதிகரிப்பு வழங்கவும்”

### விஜித கோரிக்கை: தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.2000 வழங்க கோரினார்

அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் 65 இலட்சம் ஊழியர்கள் இருக்கும் தனியார் துறைக்கு எந்த நிவாரணத்தையும் அறிவிக்கவில்லை. எனவே, வரவு-செலவுத் திட்ட நிவாரண சட்டத்தை கொண்டுவந்து தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி.எம்.பி.யான விஜித் ஹேரத் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.



ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியான தன் பின்னர் மின் கண்டனம் நூற்றுக்கு 440 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் துறை தொடர்பாக எந்த ஏற்பாடுகளும் இல்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது அரச ஊழியர்களுடன் தனியார் ஊழியர்களும் பாதிக்கப்படுக்கின்றனர்.

அரசாங்கம் வரியை நூற்றுக்கு 18ஆக அதிகரித்திருக்கிறது. இந்த வற் வரி அதிகரிப்பில் தனியார் துறையினரும் அடங்குகின்றனர்.

தொடர்ச்சி P2

## இறுதிப் போரில் மாயமான மோட்டார் சைக்கிள் காலியில்

இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலியில் மோட்டார் சைக்கிளை இழந்த கிளிநொச்சியைச் சேர்ந்த உரிமையாளர் ஒருவருக்கு காலி நீதிமன்றத்தால் வெள்ளிக்கிழமை (08) ஆஜராகுமாறு புதன்கிழமை (06) அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இறுதி யுத்த காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் முள்ளிவாய்க்காலில் விடப்பட்ட நிலையில் அது படையினரின் பிடியில் இருந்து காணாமல் போயிருந்தது. இவ்வாறு போர்க் காலத்தில் பறிபோன மோட்டார் சைக்கிளை, உரிமையாளர் நீண்ட காலம் தேடியும் கிடைக்கவில்லை.

தொடர்ச்சி P2



## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் 14 பேர் புதன்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 3 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் , கடற்படையினரால் நெடுந்தீவு கடற்பரப்பினுள் கடல் ரோந்தில்டுபட்டிருந்தபோது குறித்த மீனவர்களைக் கைது செய்து, காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

இலங்கையின் விவகாரத்தில்

## “கனடா எதிர்மறை



தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் நிலையில் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும்.ஆகையால் எம்மால் இரு முனைகளில் இருந்துக் கொண்டு செயற்பட முடியாது. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “அரசியல் தீர்மானம் வினையாகியுள்ளது

இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக இலங்கை இணக்கம் தெரிவித்து விட்டு, அந்த இணக்கப்பாட்டை மீளப்பெற்றுக் கொள்வதாக அறிவிப்பது சாத்தியமற்றது.அரசியல் நோக்கத்துக்காக அன்று எடுத்த தீர்மானம் இன்று முழு நாட்டுக்கும் வினையாகியுள்ளதென முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சரும் சுயாதீன எதிரணி எம்.பி.யுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கோட்டா வழியில் செல்கிறார் ரணில்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் வாக்குகளுக்காக இஸ்லாமிய நாடுகளை பகைத்துக் கொண்டதனால் ஜெனிவா கூட்டத்தொடரில் இஸ்லாமிய நாடுகள் இலங்கைக்கு சார்பாக வாக்களிக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறே செயற்படுகிறார்.ஜெனிவாவுக்கு ஒன்றை கூறுகின்றார் ,நாட்டில் பிறிதொன்று செயற்படுத்தப்படுகிறது.

தொடர்ச்சி P2

## சீனாவின் கப்பல் வந்தது ஏன்?



சீனாவின் கப்பல் இலங்கைக்குள் வந்து என்ன ஆராய்ச்சி செய்கின்றது? கடலை ஆளப்படுத்தப் போகின்றார்களா அல்லது மீன் வகைகளை கண்டுபிடிக்கப் யோகின்றார்களா? என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



## வீதியில் தாக்குதல் வீட்டுக்கும் தாக்குதல்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில், வீதியில் இளைஞன் மீது தாக்குதல் மேற்கொண்ட வன்முறை கும்பல், இளைஞனின் வீட்டுக்கும் சென்றும் தாக்குதல் நடத்தியுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளம்போக்கட்டி பகுதி வீதியில்,


தொடர்ச்சி P2

## ‘குடு தானு’ சிக்கினார்

ஒரு கிலோ கிராமுக்கு அதிகமான ‘ஐஸ்’ வைத்திருந்த பெண்ணொருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், ‘குடு தானு’ என பிரபலமாக அறியப்பட்டவர், தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள பிரபல போதைப்பொருள் வியாபாரி பிரமுகரான ‘மாத்தரா கல்பா’ என்பவரின் போதைப்பொருள் வியாபாரத்தை நடத்தி வந்துள்ளார்.

இதற்கமைய, வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அங்கொட பகுதியில் நேற்று (07) கைது




செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அதன்படி, 1 கிலோ 50 கிராம் எடையுள்ள ‘ஐஸ்’, இலத்திரனியல் தராசு, ரூ.12,000 பணம், ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## “சஜித் பதவி விலகவேண்டும்”



கலாசார நிதியத்தின் நிதி முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சபையில் புதன்கிழமை (06) விடுத்த சவாலுக்கமைமயை உடனடியாக அவர் பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுன எம்.பி மஹிந்தானந்த அளுத்கமகே வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) கூற்றொன்றை முன்வைத்தே இதனை வலியுறுத்தினார்.

கலாசார நிதியத்தின் நிதி பிரயோகம் சட்டத்திற்கு முரணானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என மத புத்த சாசன,சமய விவகார,

தொடர்ச்சி P2

## வடிவேலுக்கு ஜீவன் வாழ்த்து



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள பாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸூக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மலையகத் தமிழ் மக்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக ஒன்றிணைப்பதை மேற்பார்வையிடுதல் மற்றும் நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை ஆராய்தல் ஆகிய பொறுப்புகளும் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அப்பணிகளையும் அவர் சிறப்பாக முன்னெடுப்பார் என நம்புகின்றேன் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

“ மலையக அரசியல்வாதியாக, தொழிற்சங்க வாதியாகச் செயற்படும் எமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதியால் இப்படியான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

அவரால் முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு எனது அமைச்சு பக்கத்திலிருந்து ஏதேனும் ஆதரவு தேவைப்படும் பட்சத்தில்,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “சம்பள அதிகரிப்பு வழங்கவும்”

*** நாள் ஒன்றுக்கான செலவைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாவாவது வழங்க வேண்டும்**

*** வரவு–செலவுத் திட்ட நிவாரண சட்டத்தைக் கொண்டுவந்து தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

வற் வரி அதிகரிப்பின் மூலம் அரசாங்கம் 859 பில்லியன் ரூபாவை எதிர்பார்க்கிறது. அரசாங்கம் 65 இலட்சம் தனியார் துறை ஊழியர்களிடமே இந்த தொனையை பெற்றுக்கொள்ள இருக்கிறது. ஆனால், தனியார் துறைக்கு எந்த நிவாரணமும் இல்லை.

2005இல் வரவு- செலவுத் திட்டத்தில் வரவு- செலவு நிவாரண சட்டம் ஒன்று கொண்டுவந்து தனியார் துறைக்கு 1,000 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்பட்டது. அதேபோன்று 2016இல் வரவு - செலவுத் திட்ட நிவாரண சட்டம் கொண்டுவந்து 2,500 ரூபாய் அதிகரிக்கப்பட்டது. எனவே, இம்முறையும் அரசாங்கம் வரவு-செலவுத் திட்ட நிவாரண சட்டத்தைக் கொண்டுவந்து தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 4 வருடங்களுக்கு 1,000 ரூபாய் பெற்றுக்கொடுத்தோம். அதுவும் சில தோட்டங்களில் நீண்ட காலத்துக்குப் பின்னரே வழங்கப்பட்டது. அதுவும் சில தோட்டங்களில் முறையாக வழங்கப்படுவதில்லை. ஆனால், இன்று ஆயிரம் ரூபாவில் நாள் ஒன்றுக்கான செலவைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. அதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாவாவது வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## இறுதிப் போரில் மாயமான மோட்டார் சைக்கிள் காலியில்

இந்நிலையில், 14 ஆண்டுகளின் பின்பு கடத்தல் சம்பவம் ஒன்றுடன் இந்த மோட்டார் சைக்கிள் தொடர்புபட்டு மீட்கப்பட்டுள்ளதால் உரிமையாளரை வெள்ளிக்கிழமை (08) ஆஜராகுமாறு காலி நீதிமன்றம், மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.



## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது

விசாரணைகளின் பின்னர் , கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஊடாக அவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “கனடா எதிர்மறை



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணக்கமாக செயற்படுகிறோம். நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக் கொடுத்து செயற்படவில்லை.அதேபோல் பிற நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய நாட்டை நிர்வகிக்கப் போவதில்லை.

சீனா, இந்தியா, அமெரிக்கா,மேற்குலக நாடுகள் உட்பட சகல நாடுகளுடனும் இணக்கமாகச் செயற்படுகிறோம்.எந்த நாட்டையும் பகைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லை.கனடா மாத்திரம் இலங்கையின் விவகாரத்தில் எதிர்மறையான நிலைப்பாட்டில் உள்ளது.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இலங்கையின் பிரதான நிலை நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. பிளவுபடாத வெளி விவகார கொள்கையினால் தான் இந்த முன்னேற்றத்தை எம்மால் அடைய முடிந்துள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா,இந்தியா உட்பட பெரிஸ் கிளப் நாடுகள் ஆரம்பத்திலிருந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தொகை எதிர்வரும் 12 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் சாத்தியமுள்ளது என்றார்.

## “அரசியல் தீர்மானம் வினையாகியுள்ளது



எவருக்கும் அடிபணியப் போவதில்லை, நாட்டின் உள்ளக விவகாரங்களில் வெளியாட்கள் தலையிட அனுமதிக்கப் போவதில்லை என்ற நாட்டின் வெளிவிவகார கொள்கையின் தன்மையை வெளிவிவகாரத்துறை அமைச்சர் இங்கு தெரிவித்தார். இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். நானும் வெளிவிவகாரத்துறை அமைச்சராகப் பதவி வகித்த போது .இந்த நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருந்தேன்.

இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் தலையிடும் சூழலை நல்லாட்சி அரசாங்கமே உருவாக்கியது. இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக இலங்கை இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து இலங்கை தொடர்பில் தகவல் திரட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட பொறிமுறையை உருவாக்கியது. அந்த பொறிமுறை தற்போது செயற்படுகிறது.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தம் செய்யப்படும் வரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் இடம்பெறாது என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கினார். வெளிவிவகாரத்துறை அமைச்சராக நான் அந்த வாக்குறுதியை உறுதிப்படுத்தினேன்.

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளது.அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தற்போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள்.இவ்விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர் என்றார்.

## கோட்டா வழியில் செல்கிறார் ரணில்

சர்வதேச சமூகம் முட்டாள்கள் அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான நிரோஷான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் சாலிய விக்ரமசூரிய மீது 3 இலட்சத்து 3227 அமெரிக்க டொலர் நிதி மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவருக்கு அமெரிக்க வொஷிங்டன் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவரைப் பாதுகாப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இராஜாதந்திர மட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்தன.ஆனால் இவருக்கு எதிராக இலங்கையில் முறையாகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இலங்கையின் அரச தலைவர்கள் மோசடி செய்த நிதி சாலிய விக்ரமசூரிய ஊடாக வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள விவகாரம் தொடர்பில் அமெரிக்காவில் எப்.பி.ஐ.நடவடிக்கை எடுத்த போதும் அதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்றார்.

## “சஜித் பதவி விலகவேண்டும்”



கலாசார அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதற்கான கணக்காய்வு அறிக்கையை நான் சபையில் சமர்ப்பித்துள்ளேன். அதன் மூலம் இந்த மோசடி உறுதியாகியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் தமது மனைவியின் சலூனுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொண்டுள்ளமை தொடர்பிலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அந்த வகையில் அவர் பாராளுமன்றத்தில் விடுத்த சவாலுக்கமைய பாராளுமன்றத்தின் கௌரவத்தை மதித்து உடனடியாக பதவி விலக வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., கலாசார அமைச்சுக்கான செயல்பாடுகள் அனைத்தும் அமைச்சரவை அனுமதியுடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை நான் சபையில் உறுதிப்படுத்தியுள்ளேன் என்றார்.

## சீனாவின் கப்பல் வந்தது ஏன்?

சீனாவைப் பொறுத்தவரையில் நிலமாக இருக்கலாம் கடலாக இருக்கலாம் . அது தன்னுடைய அதிகாரத்துக்குள் இருக்க வேண்டுமென நினைக்கும் நாடு. எனவே இந்த விடயத்தில் இந்தியா தனது பாதுகாப்பு தொடர்பில் எழுப்பும் கேள்வி நியாயமானது என்றார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (07) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை -இந்திய ஒப்பந்தம் தொடர்பில் என்னிடம் சில கேள்விகள் உள்ளன. இந்த ஒப்பந்தத்தில் அடிப்படையிலான மாகாண சபைகள் தற்போது செயலிழந்துள்ளன. அவற்றுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு அமைச்சு எந்தளவில் அக்கறை கொண்டுள்ளது? இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாடுகளை எடுத்துள்ளதா? எனக் கேட்டார்.

எமது கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில் நாம் கடற்தொழில் அமைச்சை மட்டும் குறை கூறமுடியாது. இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை காலம் காலமாக நீடிக்கின்றது. இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டு அமைச்சுக்கும் பொறுப்புண்டு. அவ்வாறான தீர்வு முயற்சியில் நீங்கள் ஈடுபட்டால் நாம் உங்களுக்கு முழுமையான ஆதரவு தருவோம் என்றார்.

## ‘குடு தானு’ சிக்கினார்

போதைப்பொருள் கடத்தல் மற்றும் தொலைபேசி திருட்டு ஆகியவற்றில் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

கைது செய்யப்பட்ட பெண், கைப்பற்றப்பட்ட போதைப்பொருளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வீதியில் தாக்குதல் வீட்டுக்கும் தாக்குதல்



மோட்டார் சைக்கிளில் புதன்கிழமை (06) பயணித்துக்கொண்டிருந்த இளைஞனை வழிமறித்த வன்முறை கும்பல், இளைஞன் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது.

மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு, தாக்குதலாளிகளிடம் இருந்து இளைஞன் தப்பியோடியுள்ளார். அதனையடுத்து இளைஞனின் வீட்டுக்கு சென்ற வன்முறை கும்பல் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, வீட்டிலிருந்த உடைமைகளை அடித்து உடைத்து சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் , கொடிகாம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வடிவேலுக்கு ஜீவன் வாழ்த்து

அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” - எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும்

# “உடனடியாக விடுவிக்கவும்”

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த சட்டம் இரத்து செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டிற்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இறுதி யுத்தத்தில் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்ததற்காக 9 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து கண்காணிப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.




சிறுபான்மை இனத்தவர் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதற்கு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மாற்றியமைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் சர்வதேச நட்பு நாடுகள், வர்த்தக பங்காளிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கு பலமுறை உறுதியளித்துள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவுகூரும் தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவது கொடூரமான துஷ்பிரயோகம் என்பதுடன், தொடர்ச்சியாக ஒரு சமூகம் ஓரங்கட்டப்படுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நல்லிணக்கம் தொடர்பில் பேசுகின்ற போதிலும், அவரது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இனப் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா இலங்கையின் சர்வதேச பங்காளர்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியனவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விமர்சித்துள்ளன.

அரசாங்கத்தின் நிர்வாகம் மற்றும் பொருளாதார கொள்கைகள் தொடர்பான விமர்சனங்களை ஒடுக்குவதற்கும் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் கொண்டுவரப்பட்ட உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் கருத்துச் சுதந்திரத்தை வரையறுக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# ‘ஆலா’ கைது



பாருக் ஷிஹான்

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு போதைப்பொருட்களை விநியோகித்து ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று செவ்வாய்க்கிழமை (5) உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை - பெரியநீலாவணை பொலிஸாருக்கு திங்கட்கிழமை (04) இரவு கிடைக்கப்பெற்ற விசேட தகவல் ஒன்றிக்கமைய மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, ஆலா என அழைக்கப்படும் 39 வயதுடைய முஹம்மது இஸ்மாயில் அஸ்மீர் என்ற நபரை 100 கிராம் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆலாவை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# “நிலுவையை செலுத்தி விடவும்”

எம்.எஸ்.எம்.ஹனீபா



கல்முனைப் பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டணத்தை செலுத்தாத மின் பாவனையாளர்கள் நிலுவைக் கட்டணத்தை செலுத்துமாறு, கல்முனைப் பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் மின் மானி வாசிப்பவர்களுடாக மாதாந்த மின் கட்டண பட்டியலில் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்திற்கும் மேலான கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதோடு, அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படுமிடத்தில் மீளிணைப்பை ஏற்படுத்துவதற்காக முற்று முழுதான மின் நிலுவைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் மீள் இணைப்புக் கட்டணம் என்பன செலுத்த வேண்டுமெனவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையினை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு மின் பாவனையாளர்களை கேட்டுகொண்டுள்ளனர்.

# அடையாள அட்டை வழங்குதல்

நவி

எமது நாட்டில் விதவைப் பெண்கள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு உதவி செய்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் மனித உரிமைகள் நலன்புரி மத்திய நிலைய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கம்பளை ஈடன் பாக் மண்டப அமைப்பின் தலைவராகிய கலாநிதி மொஹமட் நஷார் மற்றும் பிரதான



செயற்குழு உறுப்பினர் மொஹாமட் காமில் ஆகியோர் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு குறித்த அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

## CHIRTMAS JOY

மொரட்டுவை புனித செபஸ்தியன்ஸ் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் டிசெம்பர் 09ஆம் திகதியன்று, கல்லூரி வளாகத்தில் மாலை 4 மணி முதல் "CHIRTMAS JOY" கார்னிவெல் மற்றும் வர்த்தக கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.
இந்த நிகழ்வில் உணவு, உடை, அழகுசாதனப் பொருட்கள், நுகர்வோர் ஆடைகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன, மேலும் சிறுவர்கள் விளையாடும் வகையில் சிறுவர் விளையாட்டு மைதானத்துடன் கூடிய விளையாட்டுப் பகுதியும் இயங்கி வருகின்றது.
பிரபல இசைக்குழுவான ‘ஹோப்’ டிஜே இசைக் கச்சேரியும் முன்னெடுக்கப்படும்.

# 11 வர்த்தகர்கள் மீது வழக்கு

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கோட்டைமுனை மற்றும் கல்லடி ஆகிய பிரிவுகளில் புதன்கிழமை (06) திடீர் சுற்றிவளைப்பின்போது, மனித பாவனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது மனித பாவனைக்குதவாத, காலாவதியான, விலைப் பட்டியல் ஒட்டப்படாத பெருமளவு உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# பற்றியெரிந்தது கார்



அக்குரஸ்ஸ பேருந்து நிலையத்தில் வியாழக்கிழமை (07) நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரொன்று திடீரென தீப்பிடித்து எரிந்ததில் அந்தக்கார் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், இதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தன்று காரை நிறுத்தி விட்டு தனது நண்பர்களைச் சந்திப்பதற்குச் சென்று பின்னர் திரும்பி வரும்போது கார் சதுப்புநிலத்தில் சிக்கி நகர்த்த முடியாத நிலையில் இருந்ததாகவும், காரை வேகமாக பின்னாடி எடுக்க முற்பட்டபோது காரின் கதவுகள் அனைத்தும் பூட்டப்பட்டு காரில் முன்பக்கத்திலிருந்து திடீரென தீ பரவியதாகவும் பொலிஸாரிடம் வாக்குமூலம் சாரதி அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அதிபர்களை மாற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

ஹஸ்பர்

திருகோணமலை-கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட நீலபொல வித்தியாலயம் முன்பாக பெற்றோர்கள் ஒன்றிணைந்து அதிபர் மற்றும் பிரதி அதிபர்களை மாற்றக்கோரி வியாழக்கிழமை (07) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், இரு மாணவர்களை தாக்கியமை தொடர்பில் இடம்பெற்றுள்ளதுடன், “அதிகாரங்களை பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து



மாணவர்களை தாக்குவது கண்டிக்கத்தக்கது” என பதாகைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

சர்வதேச மனக் கணித போட்டியில்

# மன்னார் மாணவர்கள் சாதனை

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மலேசியாவில் இடம்பெற்ற சர்வதேச மனக் கணித போட்டியில் மன்னார் மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

80ற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றிய சர்வதேச மனக் கணித போட்டியில் சுமார் 2,500 மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். இப்போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், 62 மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். அதில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணங்களை வென்றுள்ளனர்.

அந்த வகையில், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான எஸ்.சிறோன்றாஜ், D பிரிவில் பங்கு பற்றி 2ஆம் இடத்தையும், மாணவன் வி.செஸான் 3ஆம் இடத்தையும், லஸால் கிட்ஸ் கேம்பஸில் கல்வி கற்கும் மாணவி ஜே.றெறா ஜெசாரி 3ஆம் இடத்தையும், யோசப் வாஸ் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் கே.அறிஸ்மித் 3ஆம் இடத்தையும், தோட்டவெளி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஆர்.ரியானா 3ஆம் இடத்தையும் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்கள் மன்னார் UCMAS நிறுவனத்தின் நிர்வாகியும் ஆசிரியருமான ந.கேதீஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் இப்போட்டியில் பங்குபற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை



தங்காலை - உலேகொட பிரதேசத்தில் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று புதன்கிழமை (06) இடம்பெற்றுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலேகொட பிரதேசத்தைச் சேர்ந்த தசுன் லங்காசேனபது என்ற 30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தொழிலாளர்கள் தேவை

தையல் கலைஞர் (ஆண் , பெண்), உதவியாளர் (பெண்), ஷோ ரூம் பராமரிப்பாளர் (பெண்) தேவை.
இலக்கம் 1 & 3 (1D), சின்சபா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06,
தொடர்புகளுக்கு 0777340758 அறை 0765637235

# தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பது அவசியம்

வாழ்க்கை சுமை நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தலையைத் தூக்கமுடியாத நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், பெறுமதி சேர் வரி (வற்) தொடர்பில் அபாயகரமான அறிவிப்புகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

அதிகரிக்க எதிர்பார்த்திருக்கும் 18 சதவீதமான வற்வரி, 2024ஆம் ஆண்டு ஜனவரி ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான விவாதம், பாராளுமன்றத்தில் ஞாற்றுக்கிழமை (10) நடைபெறவுள்ளது. எவ்வாறான பொருட்களுக்கு இந்த வற் வரி விதிக்கப்படவுள்ளது என்பதை அன்றையதினம் அறிந்துகொள்ள முடியும்.

பாராளுமன்றத்தில் தற்போது விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் (பட்ஜெட்) அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 2024ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

எனினும், 65 இலட்சம் ஊழியர்கள் இருக்கும் தனியார் துறைக்கு எந்த நிவாரணத்தையும் அறிவிக்கவில்லையென குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக தனியார்துறையினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது. எனினும், வரவு- செலவு நிவாரண சட்டமொன்றை கொண்டுவந்து தனியார் துறைக்கு சம்பளத்தை அதிகரிக்கலாம்.

இவ்வாறான ஒரு முறைமை, 2005 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டன என்பதை இங்கு நினைவூட்டுகின்றோம். அவ்வாறான முறைமையை இம்முறையும் கடைப்பிடிப்பது, தனியார் துறையினரின் சுமையை ஓரளவுக்கேனும் இறக்கமுடியும் என்பதே எதிர்பார்ப்பாகும். ஏனெனில், விரிக்கப்படும் வரிகள் அனைத்தும் தனியார் துறையினர் மீதும் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியான தன் பின்னர், மின் கண்டனம் நூற்றுக்கு 440 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2024 பட்ஜெட்டில், தனியார் துறை தொடர்பாக எந்த ஏற்பாடுகளும் இல்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது சகல தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர்.

அரசாங்கம் வரியை நூற்றுக்கு 18ஆக அதிகரித்திருக்கிறது. வற் வரி அதிகரிப்பின் மூலம் அரசாங்கம் 859 பில்லியன் ரூபாவை எதிர்பார்க்கிறது. அரசாங்கம் 65 இலட்சம் தனியார் துறை ஊழியர்களிடமே இந்த தொகையை பெற்றுக்கொள்ள இருக்கிறது.

ஆனால் தனியார் துறைக்கு எந்த நிவாரணமும் இல்லையெனத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துரைத்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, அரச துறையினரின் சம்பள அதிகரிப்புடன் தனியார் துறையினரின் சம்பளத்தையும் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார் என்றார்.

விலை அதிகரிப்பு, வரி அதிகரிப்பால், சகல துறையினருமே பாதிக்கப்படுகின்றனர். ஆகையால், சகல துறைகளுக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்வதே சிறந்தது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே, நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள். அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது.

நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன் பிறந்தேன் எனத் சலிப்படைவதும், சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது, எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்பிடுவதில்லை.

போரை விரும்பகின்றார்கள், வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்ளை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள். பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மன நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம்

கல்முனை பிரதேச வீதிகளில் மனநோயாளர்களின் எண்ணிக்கையும் நடமாட்டமும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதனால் வீதியில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் குறிப்பாகப் பெண்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பொதுமக்கள் அதிகம் சஞ்சரிக்கும் சந்தை , கடைத்தெரு, ஹோட்டல்கள், பஸ் தரிப்பு நிலையங்கள், பொழுது போக்கு தலங்கள், மத நிகழ்வுகள் இடம்பெறும் இடங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அண்மையிலும் இவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதுடன் பொது மக்களிடம் அநாகரியமான முறையிலும் நடந்து கொள்கின்றார்கள்.

வீதிகளில் சுற்றித் திரியும் மனநோயாளிகள், நோயாலும், விபத்துகளாலும் உயிரிழக்கும் பரிதாப நிலையும் ஏற்படுகிறது.

இவர்கள், உணவகங்களில் மிஞ்சும் உணவுகள், சிலர் தாமாக வாங்கி கொடுக்கும் உணவை உட்கொண்டு பசியை போக்கியபடி சுற்றி வருகின்றனர். சுகாதாரமற்ற நிலையில், அவர்கள் தங்கள் வாழ்நாளைக் கழித்து வருவதால், உடல் நிலை பாதிப்புக்கு ஆளாகி நோய் வாய்ப்பட்டு, கண்டுகொள்ள ஆளின்றி உயிரிழக்க நேரிடுகிறது.

ஆகையால், அவர்களைக் காப்பகத்தில் உரிய தரப்பினர் சேர்க்க வேண்டுமென, பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 30:

# பண்டாரநாயக்க கொலை: பௌத்தத்தின் இன்னொரு முகம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் முதலாவது அரசியல் படுகொலை பிரதமர் எஸ். டபிள்யு.ஆர். டி.பண்டாரநாயக்கவினுடையது. எந்தப் பௌத்த பிக்குகளின் துணைகொண்டு பண்டாரநாயக்க ஆட்சியைப் பிடித்தாரோ, அதே பிக்குகளினாலேயே அவர் கொலை செய்யப்பட்டார். இந்நிகழ்வு சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் மிகவும் முக்கியமான அதேவேளை அதிகம் கவனமீர்க்காத நிகழ்வு. அது கவனம் பெறாமைக்கான காரணங்கள் பல. அவை குறித்து இங்குச் சுருக்கமாக நோக்கலாம்.

இக்கொலை இலங்கை அரசியல் குழப்பத்திலிருந்த ஒரு காலப்பகுதியில் நிகழ்ந்தது. 1959 செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி தனது இல்லத்தில் விருந்தினர்களைச் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு பௌத்த பிக்குவினால் சுடப்பட்டு பண்டாரநாயக்க இறந்தார். குறித்த தினத்தன்று காலை பண்டாரநாயக்கவை சந்திக்க வந்தவர்களில் தல்துவே சோமாராம தேரரும் ஒருவர். அவர் பொரளையில் உள்ள அரசாங்க ஆயுர்வேத சுதேச மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். அமர விகாரையுடன் இணைந்திருந்த சோமாராம தேரர் பொரளையில் ஆயுர்வேத கண் மருத்துவமனை ஒன்றையும் வைத்திருந்தார். அவர் ஆயுர்வேத கல்லூரிக்கான தேவைகள் குறித்துப் பேசுவதற்கு பிரதமரை சந்திக்க விரும்பியதாகச் சொல்லியிருந்தார். தனது முறை வந்ததும் பிரதமரைச் சந்திக்கத் தயாரான தேரர், தான் ஒளித்து வைத்திருந்த கைத்துப்பாக்கியால் பிரதமரை சுட்டார். இதனைத் தொடர்ந்து அங்கிருந்தோர் அவரைச் சூழ்ந்துகொள்ள 'தேசம், சிங்கள இனம், பௌத்தம்' ஆகியவற்றின் நன்மைக்காகவும் எதிர்காலத்திற்காகவும் இதைச் செய்ததாகத் தேரர் உரத்துச் சத்தமிட்டார். அந்தக் கோஷம் இன்றும் ஒலிப்பது இலங்கையின் துர்ப்பாக்கியம்.

இதைத் தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் தொடங்கின. அதேவேளை, நாட்டில் பதட்டம் நிலவியது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பண்டாரநாயக்க நாட்டு மக்களுக்குச் செய்தியொன்றை விடுத்தார். அதில் 'துறவி போல் காவியுடையணிந்த முட்டாள் மனிதனே இச்செயலைச் செய்தான், அவனுக்குக் கருணை காட்டுங்கள்' என்று சொன்னார். இதற்கிடையில் ஆளுநர் நாயகம் ஒலிவர் குணதிலக, அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தார். வதந்திகள் பரவ ஆரம்பித்தன. குறிப்பாக சோமரமணன் என்ற தமிழன் பிரதமரைக் கொன்று விட்டான் என்றும் பிக்கு போல் உடையணிந்த தமிழன் ஒருவனே இக்கொலையைச் செய்தான் என்றும் கதைகள் பரவின. இது அக்காலப்பகுதியில் இருந்த தமிழின வெறுப்பைப் பிரதிபலித்தது. இது பண்டாரநாயக்கவே விதைத்தது. மறுநாள் பண்டாநாயக்க உயிரிழந்தார்.

இந்தக் கொலை ஏன் நடந்தது என்ற கேள்வி மிக முக்கியமானது. பண்டாரநாயக்கவின் அரசியல் வருகையில் இரண்டு விடயங்கள் செல்வாக்குச் செலுத்தின. முதலாவது இடதுசாரிகளின் ஆதரவு. இரண்டாவது பௌத்த பிக்குகளின் ஆதரவு. ஆட்சியிலிருந்த இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்தை ஒரு இடதுசாரித் தன்மையுடையதாக வழிநடத்தினர். இது கட்சியின் வலதுபக்கத்தில் இருந்தோருக்கு மிகப்பெரிய சவாலையும் அச்சத்தையும் உருவாக்கியது. பண்டாரநாயக்கவின் பின்னர் பிரதமரான விஜயானந்த தகநாயக்க இந்த வலதின் முக்கிய புள்ளியாக இருந்தார். அவரோடு இடதுசாரிகளுக்கு எதிரான போராட்டத்தை அரசாங்கத்துக்குள் முன்னெடுத்தவர் மாப்பிடிகம புத்தரகித தேரர். இவர் செல்வாக்கும் புகழும் பெற்ற களனி விகாரையின் விகாராதிபதி. 1956 தேர்தலில் இவரது ஐக்கிய பிக்கு முன்னணி இவருக்கு ஆதரவு வழங்கியது. இதனால் இவர் அரசாங்கத்தின் முக்கிய புள்ளியானார். இவர் துறவியாக இருந்த போதும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு செல்வந்தராகவும் இருந்தார். இதனால் பண்டாரநாயக்கவின் தேர்தல் பிரசாரங்களுக்கு பெருமளவிலான பணத்தைச் செலவழித்தார். இவர் பண்டாரநாயக்க அரசாங்கத்தின் 'கிங்-மேக்கர்' என அறியப்பட்டார். ஆனால் இவரது செல்வாக்குக்குக் கட்டுப்பட பண்டாரநாயக்க விரும்பவில்லை. இருவருக்கும் இடையில் முரண்பாடு முற்றியது. தீவிர இனவாதிய புத்தரகித தேரர், பண்டா-செல்வா உடன்படிக்கையை எதிர்த்து பிக்குகள் நடத்திய போராட்டத்தின் சூத்திரதாரி. ஆனாலும், பணிந்து போக பிரதமர் விரும்பாததால் அவரை ஒழித்துக்கட்ட புத்தரகித தேரர் முடிவெடுத்தார். இந்த முடிவு தேசம் சார்ந்ததோ, இனஞ்சார்ந்ததோ மதஞ்சார்ந்ததோ இல்லை. இந்தப் பகையின் ஊற்றுக்கண் வியாபாரம்.

புத்தரகித தேரருக்கும் பண்டாரநாயக்கவும் தீராத பகையை ஏற்படுத்திய விடயங்கள் இரண்டு. முதலாவது, மியன்மார் மற்றும் தாய்லாந்தில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதற்காக புத்தரக்கிதாவால் தனது கூட்டாளியான எச்.பி.ஜெயவர்த்தனவின் பெயரில் இணைந்து நிறுவப்பட்ட கொழும்பு ஷிப்பிங் லைன்ஸ் என்ற நிறுவனத்திற்கு இலாபகரமான கப்பல் ஒப்பந்தத்தை வழங்கப் பிரதமர் மறுத்தமை. இரண்டாவது, பல கோடி ரூபா செலவில் சீனி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை எஸ். டபிள்யூ.ஆர்.டி நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்க மறுத்தமை. இதனால் புத்தரகிதாவிற்கும் அவரது தலைவரான ஜயவர்தனவிற்கும் பெரும் நிதி இழப்பு ஏற்பட்டது. மேலதிகமாக இவர்களுக்குச் சீனி உற்பத்தி உரிமமும் மறுக்கப்பட்டது.

இதனால் எல்லையில்லாக் கோபமடைந்த புத்தரகித தேரரும் அவரது கூட்டாளியான ஜயவர்தனவும் திட்டமிட்டு உணர்ச்சிவசப்படுகின்ற சிங்களக் கடும்போக்குவாதியான சோமாராம தேரரைத் தூண்டி நிகழ்த்திய படுகொலை. இம்மூவரைத் தாண்டி இன்னும் சிலரும் இக்கொலையில் தொடர்புபட்டிருந்தனர். அதில் முக்கியமானவர் ரணில் விக்ரமசிங்கவின் பாட்டியான விமலா விஜயவர்த்தன. இவர் இலங்கையின் முதலாவது பெண் அமைச்சராக பண்டாரநாயக்கவின் மந்திரிசபையில் அங்கத்துவம் வகித்தவர். இவருக்கும் புத்தரகித தேரரும் மிகவும் நெருங்கிய உறவு இருந்தது. இவரது தேர்தல் பிரச்சார செலவுகளை புத்தரகிதவே பார்த்துக் கொண்டார். இந்த உறவின் காரணமாக விமலா கைது செய்யப்பட்டார்.

புதிய பிரதமராகப் பதவியேற்ற தகநாயக்க, புத்தரகித தேரருடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். புத்தரகதிதவின் அரசியல் செல்வாக்கு தனக்குப் பயனுள்ளது என அவர் நினைத்தார். அடுத்த தேர்தலில் ஐக்கிய பிக்கு முன்னணியின் உதவியோடு மீண்டும் பிரதமராகலாம் என அவர் கனவு கண்டார். புத்தரகிதவை அலரி மாளிகைக்கு அழைத்து இலங்கை வானொலியில் பண்டாரநாயக்க குறித்து உரையாற்ற அனுமதித்தார். கொலையின் மூலகர்த்தாவே தான் கொலைசெய்த நபர் குறித்து இரங்கலுரை ஆற்றிய விசித்திரமும் நடந்தேறியது. இவை அனைத்திற்கும் பிறகு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி புத்தரகித தேரர் கைது செய்யப்பட்டார். இக்கைது அனைத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இன்றுபோலன்றி அரசியல் தலையீடுகள் இன்றி விசாரணைகள் நடைபெற்றதாலேயே அரசியல் செல்வாக்கு மிக்க புத்தரகித கைது செய்யப்பட்டார் என்றே சொல்லலாம்.

இந்தக் கொலை தொடர்பில் இரண்டு நூல்களே ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளன. இரண்டும் வெவ்வேறு கோணங்களில் எழுதப்பட்டவை. ஆனால் இவை தருகின்ற செய்திகளின் வழி எழுகின்ற வினாக்களுக்கு இதுவரைப் பதில்கள் கிடைக்கவில்லை. சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியல் படுகொலை மீது மிகக் குறைவான கவனமே செலுத்தப்பட்டுள்ளது. இது ஏன் என்ற வினாவும் முக்கியமானது.

பண்டாரநாயக்கவே தனது வர்க்க நலன்களுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்திருந்தார். பேருந்து போக்குவரத்து, காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் கொழும்பு துறைமுகம் போன்றவை தேசியமயமாக்கப்பட்டமை வர்க்க நலன்களுக்கு எதிரானது. அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர் நிலச் சட்டம், நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட குத்தகை விவசாயிகளுக்கு அதிக உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவான அரை நிலப்பிரபுத்துவ, நில உடைமை வர்க்கங்களின் பெரும் பகுதியினர் நெல் நிலச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டனர். எனவே, பண்டாரநாயக்க அகற்றப்பட வேண்டியவர் என்ற நிலைப்பாட்டை மேட்டுக்குடியினர் எடுத்தனர். இக்கோணத்தில் இக்கொலை ஆய்வுக்கு உட்படுத்தப்படவே இல்லை.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கொலை குறித்து அதிகம் பேசப்படாமைக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது, 'பௌத்த பிக்குகளின் ஆயுத வன்முறை' என்பதற்கான முதலாவது உதாரணம் இக்கொலை. இதைப் பொதுவெளியில் ஏற்றுக்கொள்ள சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் விரும்புவதில்லை. எனவே இது இலங்கை வரலாற்றின் முக்கிய பேசுபொருளாக இல்லை.

இரண்டாவது, 1950களிலேயே பௌத்த துறவிகளின் அரசியல் செல்வாக்கு எத்தகையதாக இருந்தது என்பதற்குச் சிறந்த உதாரணம் புத்தரகித தேரர். புத்தர் அரசியலை வெறுத்துத் துறவறம் பூண்டார். இங்கோ பௌத்தம் அரசியல் மயமாகியது. இதை வெளிவெளியாக ஏற்றுக்கொள்ள ஒரு தேசமாக இலங்கை தயாராக இல்லை.

மூன்றாவது பௌத்த துறவிகள் வியாபாரிகளாக, வர்த்தகர்களாக, தரகர்களாக இருந்தார்கள் என்பதை இக்கொலை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இன்று நாம் காண்கிற சிங்கள பௌத்த பேரினவாத அகங்காரமும் அதன் ஆதார சுருதியான பௌத்த துறவிகளும் இப்போதைய உருவாக்கமல்ல, அவை 1950களிலேயே தோற்றம் பெற்றுவிட்டன என்பதைக் கோடு காட்டுவது இக்கொலையே.

# SLANSHEI அறிமுக தேசிய கல்வி மாநாடு

உயர் கல்வியின் எதிர்காலத்தை சீரமைப்பதில் முக்கிய படியாக, அரச சாராத உயர் கல்வி நிலையங்களின் இலங்கை சம்மேளனம் (SLANSHEI), தேசிய உயர் கல்வி மாநாட்டை முன்னெடுத்திருந்தது. இலங்கையின் உயர் கல்விக்கு TNE (Transnational Education) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்த குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் இந்த மாநாடு, கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் 2023 நவம்பர் 28ஆம் திகதி நடைபெற்றது.

2016ஆம் ஆண்டு இலங்கையின் சில முன்னணி தனியார் உயர் கல்வி நிலையங்களினால், நாட்டின் அரச சாராத உயர் கல்வித் துறைக்கு தலைமைத்துவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் SLANSHEI நிறுவப்பட்டது. அரச சாராத உயர் கல்வித்துறையின் விரிவாக்கம், தரம் மற்றும் நியமங்களை மேம்படுத்தல், வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுத்தல், ஆய்வுக் கோவை மற்றும் ஆய்வு வெளிப்படுத்தலை மேம்படுத்தல் மற்றும் சர்வதேசமயமாக்கலை ஊக்குவித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துவதாக மூலோபாயத் திட்டம் கவனம் செலுத்தியிருந்தது.




தேசிய உயர் கல்வி மாநாடு, வைபவ ரீதியில் பாரம்பரிய விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம்ஜயந்த் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ட்ரியு பெட்ரிக் ஆகியோர் பங்கேற்றதுடன், பிரிட்டிஷ் கவுன்சில் பணிப்பாளர் ஓர்லான்டோ எட்வர்ட்ஸ், Skills & Education Group பிரதம நிறைவேற்று அதிகாரி போல் ஈலஸ், கீலி பல்கலைக்கழகத்தின் கலாநிதி. அனிடா ஹேய்ஸ், இலங்கை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் SLANSHEI தலைவர் கலாநிதி. தயான் ராஜபக்ஷ ஆகியோரும், பிரதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்களிப்பாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

SLANSHEI தலைவர் கலாநிதி. தயான் ராஜபக்ஷ வரவேற்புரையை ஆற்றியிருந்ததுடன், இதன்போது, நாட்டில் உயர் கல்வி வழங்கலின் தரத்தையும் பன்முகத்தன்மையையும் மேம்படுத்துவதில் TNEகள் ஆற்றும் முக்கியமான பங்களிப்பை பற்றி விளக்கமளித்திருந்தார். புவியியல் எல்லைகளை மாற்றியமைப்பதற்கு அவசியமான பங்காண்மைகளை கட்டியெழுப்புவதில் SLANSHEI கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் கலாநிதி. ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கலாநிதி. ராஜபக்ஷவின் உரையைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் கவுன்சில் பணிப்பாளர் ஓர்லான்டோ எட்வர்ட்ஸ் உரையாற்றுகையில், இலங்கையின் உயர் கல்விக் கட்டமைப்பை தரமானதாகவும் சர்வதேச மட்டத்துக்கும் கொண்டு செல்வதற்கு சர்வதேச ரீதியில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய பங்காண்மைகளுக்கு காணப்படும் வாய்ப்புகள் பற்றி குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேமஜயந்த் ஆற்றியிருந்த விசேட உரை அமைந்திருந்தது. தமது உரையில், கல்விச் சிறப்புக்கு உகந்த சூழலை கட்டியெழுப்புவதில் அரசாங்கத்தினால் காண்பிக்கப்படும் அர்ப்பணிப்பு பற்றி ஒன்றுகூடியிருந்தவர்களுக்கு குறிப்பிட்டார். இலங்கையின் உயர் கல்வித்துறையை சர்வதேச நியமங்களுக்கமைய தரமுயர்த்துவதில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றியும் அமைச்சர் பிரேமஜயந்த் தெளிவுபடுத்தினார்.

முதலாவது கருத்துரையை, ஐக்கிய இராஜ்ஜியத்தின் உயர் கல்வித் துறைக்கு TNE விடயங்கள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் *Universities* UK International (UUKi) இன் தலைமை மதிப்பாய்வு மற்றும் கண்காணிப்பு குழுவின் கலாநிதி. அனிடா ஹேய்ஸ் ஆற்றியிருந்தார். சமூகத்தில் பல்கலைக்கழகத்தின் பங்கில் TNE ஒரு கூறாக அமைந்திருப்பதை இவர் வலியுறுத்தியதுடன், மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புகளை வழங்குவதாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். தேசங்களுக்கிடையிலான உறவுகளில் தரம் மற்றும் பங்குக்கான தேவை பற்றி இவர் குறிப்பிட்டதுடன், TNE பாடவிதானத்தில் இணை-விருத்தி, இணை-விநியோகம் மற்றும் இணை-சான்றளிப்பு போன்றவற்றுக்கு உதாரணத்தையும் வழங்கியிருந்தார்.

இரண்டாவது பிரதான உரையை அரச மற்றும் அரச சாராத உயர் கல்வியில் பெருமளவு பங்களிப்பை வழங்கியுள்ள கல்விமானாகிய கலாநிதி. அதுல பிட்டிகல-ஆரச்சி ஆற்றியிருந்தார். இவர் தற்போது SLIIT international இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாக திகழ்கின்றார். சர்வதேச மற்றும் உள்நாட்டு கல்விக் கட்டமைப்பில் நிரந்தரமான அங்கமாக TNE கல்வி அமைந்துள்ளதாக குறிப்பிட்டதுடன், அரசாங்கத்தினால் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், உயர் கல்வியில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து, தரமான உயர் கல்விக்கு காணப்படும் அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு, மூலதன வெளிச்செல்கை மற்றும் புத்திஜீவிகளின் வெளியேற்றம், வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுத்தல் மற்றும் அந்நியச் செலாவணியை உருவாக்கல் மற்றும் இலங்கையை கல்வி மையமாக கட்டியெழுப்புவது போன்றவற்றில் உதவியாக அமைந்திருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# Sun Siyam ரிசோர்ட்ஸ் கொழும்பில் விசேட நிகழ்வு

கிழக்கு கரையோரத்தில் தனது மேம்படுத்தப்பட்ட ஐந்து நட்சத்திர சொகுசு புட்டிக் ஹோட்டலான *Sun Siyam* பாசிக்குடாவை மீள ஆரம்பித்ததை குறிக்கும் விசேட நிகழ்வை அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது.

Sun Siyam ரிசோர்ட்ஸ் புட்டிக் ஹோட்டல் தொடரின் அங்கத்தவராக அமைந்துள்ள இந்த ரிசோர்ட் இந்த நிகழ்வுக்கு பிரயாண முகவர் பங்காளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் விசேட பிரமுகர்களை வரவேற்றிருந்தது. இதில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயா கமகே மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் அடங்கியிருந்தனர். மேம்படுத்தப்பட்டு மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த ஹோட்டலின் பிரத்தியேகமான அனுபவங்கள் மறறும் நாட்டுக்கு வழங்கப்படும் பங்களிப்பு ஆகியவற்றை இந்த நிகழ்வு வெளிப்படுத்தியிருந்தது.



Sun Siyam ரிசோர்ட்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி தீபக் பூநெடி வரவேற்புரை ஆற்றியிருந்தார். அதனைத்தொடர்ந்து பொது முகாமையாளர் அர்ஷத் ரிஃபாய் வரவேற்று உரையாற்றியதுடன், ரிசோர்ட் தொடர்பான விளக்கமளிப்பை Sun Siyam பாசிக்குடா விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் துலங்க டி மெல் ஆற்றியிருந்தார்.

சுற்றுலாப் பயணிகள் அதிகளவு நாடும் பகுதியாக இலங்கை மீண்டு வரும் சூழலில், இந்த அழகிய தீவிற்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கான சிறந்த காலப்பகுதியாக Sun Siyam ரிசோர்ட்சுக்கு இது அமைந்துள்ளது. 2014ஆம் ஆண்டில் Sun Aqua பாசிக்குடா எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஹோட்டல், 2020ஆம் ஆண்டில் மீளவர்த்தக நாம பெயரிடலுக்குட்படுத்தப்பட்டு Sun Siyam ரிசோர்ட்ஸ் ஹோட்டல் தொடரின் அங்கமாக, *Sun Siyam* பாசிக்குடா எனப் பெயர் மாற்றப்பட்டது.

Sun Siyam பாசிக்குடாவின் இலங்கையின் மனம்மறவாத அனுபவங்களை வழங்கும் அர்ப்பணிப்பில் புதிய அத்தியாயமாக இந்த மீளத்திறப்பு அமைந்துள்ளது. ஐந்து நட்சத்திர புட்டிக் ஹோட்டல், இலங்கையின் மாசற்ற கிழக்கு கரையோரப் பகுதியில் அமைந்துள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சுமார் ஆறு மணி நேரத்தில் பயணிக்கக்கூடியதாக இருக்கும். 34 இடவசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகள், பூந்தோட்டப் பகுதி அல்லது கடற்கரை பெவிலியன்கள், நீச்சல் தடாகத்துடன் அல்லது நீச்சல் தடாகமின்றி பெற்றுக் கொள்ள முடிவதுடன், ஜோடியாக, குடும்பமாக அல்லது நண்பர்கள் குழுவாக பயணிப்போருக்கு பிரத்தியேகமான கரையோர அனுபவத்தை உறுதி செய்வதாக Sun Siyam பாசிக்குடா அமைந்துள்ளது.

உள்ளக வடிவமைப்பு மறுசீரமைப்பில் முக்கிய பங்காற்றியிருந்த Studio Sixty7இன் ஸ்தாபகர்களும் புத்தாக்க பணிப்பாளர்களுமான லீ மெக்நிகோல் மற்றும் ஜோஸ் ரிவேரோ ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஹோட்டல் திட்டத்துக்கான எமது வடிவமைப்பு கொள்கையானது,
5 நட்சத்திர புட்டிக் உள்ளக அலங்காரத்துடன், மொனோகுரோமெட்டிக் உள்ளக வடிவமைப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. இந்த திட்டத்தை வடிவமைக்கும் போது, பாசிக்குடா கரையோரப் பகுதியில் பிரத்தியேகமான, மதிநுட்பமான மற்றும் கண்கவர் உள்ளக அலங்காரத்தை ஏற்படுத்த தீர்மானித்திருந்தோம்" என்றனர்.

இந்த ரீசோர்ட்டினூடாக சிறந்த உணவருந்தும் அனுபவம், பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் சுவைகளுடன் வழங்கப்படுகின்றன. இலங்கையின் கிழக்கு கரையோரப் பகுதியில் காணப்படும் மாபெரும் *iwe cellar* ஆன The Cellar, பெருமளவு தேநீர் தெரிவுகளை, தேயிலை முன்னோடிகளை ஒருங்கிணைத்து வழங்கும் *Tea House*, நீச்சல் தடாகத்தை அண்மித்த உணவருந்தும் அனுபவத்தை வழங்கும் the Slice & Grill இல் pizza and grill உணவுகள் வழங்கப்படுவதுடன், Beach Shack இல் பான வகைகள் போன்றன அடங்கியுள்ளன.

Sun Siyam பாசிக்குடாவில், விருந்தினர்களுக்கு இலங்கையின் பிரத்தியேகமான அதிசங்களை கண்டுகளிப்பதற்கான வாய்ப்புகள் பெற்றுக் கொள்ளலாம். பாசிக்குடா கரையோரத்தின் அழகிய கடல் நீரினுள் காணப்படும் உலகை அனுபவிக்க முடியும். snorkel அல்லது scuba diving சாகச அனுபவத்தை பெற்று பவளப் பாறைகளை பார்வையிடலாம். குடா பகுதியில் jet-skiing, kayaking மற்றும் tube rides ஆகிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



## மூட மறுக்கும் விழிகள்

விழிகளுக்கு விடுதலை
தொலைதூர நிலவாய்
இரசித்திடக் கூட
விதியேட்டில் எழுத்துகள்
இல்லை...
வெற்றுக் காகிதத்தில்
கிறுக்கி வெளிக்காட்ட
முடியாது கசக்கி வீசிய
கவிதைகளாய் மனதில்
மலரும் விருப்புகள்
வெறுப்புகள் என்று
வெறுத்து ஒதுக்கக் கூட
அனுமதியற்று ஓர் இயந்திரமாய்
இதயம்...

வேடிக்கை வாழ்வின்
வியத்தகு விந்தைகளை
பார்த்து இரசிக்க
அனுப்பிய பரிசாய்
வெண்படலம் சூழ்ந்தாலும்
கருவிழிதான் பார்வைக்கென
கருமையை உயர்த்தி
காட்சி கொடுக்கும் விழிகளுக்கு
துடுப்பின்றிப் போனதால்
நீருள் மூழ்கித் தத்தளித்து
நின்று அவை
மூட மறுப்பது தான் ஏனோ.....?



குகதா
கிளிநொச்சி



## எத்தனை நினைவுகள்...

மழைக்கால நினைவுப் பறவைகள்..
மண்டையோட்டைக் குடைகின்றன
காந்தள் மலர்களில்..
ஒட்டிப் போன குருதியின் வாசம்

இலக்குகள் தேடிய–
மானுடவாழ்வு! கற்பூரமாய்..
காற்றில் கரைந்து போனதே?

இரவின் கண்களை இறுக்கிப் பிடித்து –
விடிவிற்காக, விடியவிடாமல்...
தடுத்து நிறுத்திய காலம் –

உருண்டு கடந்து போனது–
விடியல் தெரியாமல்!

புறநானூற்றுக் காட்சிகள்.
கண்களில் வந்து வந்து போகும்..
குருதிச் சாயம் பூசிய
மானுட ஓவியங்கள் மாத்திரம்
இதயங்களில் சிம்மாசனம் போடும்..

தியாகச் சுவடுகள் ––
கண்ணனின் பாதச் சுவடுகளாய்..
கார்த்திகையாய் பூத்துக் குலுங்கும்
வருகைக்காய் காத்திருக்கும்
உறவுகளின் உள்ளங்கள் மட்டும்..

க.யோகானந்தன்






## கால நர்த்தனம்...!

வாசிப்பில்
எழுத்தில்
வாஞ்சை மிகப்பெற்ற
இளைஞனவன்.

இலக்கிய விழாக்கள்
நூல் வெளியீடுகள்
எதுவானாலும்
அழைப்பிதழை எதிர் பாராமலேயே
அவனது வருகை
நிச்சயமானது.

பழைய நண்பர்களுடன்
உரையாடுவதற்கும்
புதியவர்களின் அறிமுகத்தை
ஏற்படுத்தி
தனது கலை இலக்கிய
நட்பு வட்டத்தை அகலிக்கவும்
ஏற்ற தருணமாக
விழா ஆரம்பமாவதற்கு
முன்பாகவே மண்டபத்திற்கு
வருகை தருவதும் அவனது வழக்கமாகும்.



விழா முடிந்ததும்
அவசரமாக பலர் பறந்துவிடுவதால்
சந்திக்க வேண்டுமென நினைத்த பலரை
அவன் கோட்டை விட்டுவிடுவதுண்டு.

அந்த நிலை ஏற்படாதவாறு
அன்றும் அவன்
விழா ஆரம்பமாவதற்கு முன்பாகவே
மண்டபத்துக்கு வருகைதந்து
இருக்கைகளில்
அமர்ந்திருப்பவர்களுடன்
உரையாடும் நோக்குடன்
அவர்களை வாஞ்சையுடன்
நோக்கிய போது,
குனிந்த தலைகள்தான்
அவனை வரவேற்றன.

அவர்களது
முகங்களெல்லாம்
முகநூலில் புதைந்துபோக
அவர்களது சுண்டுவிரல்கள்
மிக இலாவகமாக
கைபேசித் திரைகளில்
நாட்டியமாடிய வண்ணமிருந்தன!

ஷெல்லிதாசன்




## நெஞ்சினிலே

கனவில் விழியின் ஒளியோ – என்
காதல் கிளியின் மொழியோ...!
மலரில் வழியும் தேனோ. – அவள்
இதழில் சொரியும் நுரையோ...!
வானில் தோன்றும் முகிலோ – இவள்
கூந்தல் அசையும் எழிலோ...!
அன்னம் நடக்கும் நடையோ – அவள்
நடையில் அசையும் இடையோ...!
வீணை மீட்கும் அழகோ – இவள்
விரல்கள் விரியும் விதமோ...!
பாதை போகும் அழகோ – அவள்
பாதம் பட்ட இடமோ...!
வானவில்தான் வடிவோ – இவள்
வண்ண கண் தான் வசமே ...!

றொபின்சியா பிரான்ஸ்





வடகொரியா

# அதிக குழந்தைகளை பெற்றெடுங்கள்

## மேடையில் கண் கலங்கிய கிம்ஜாங் உன்



விசித்திரமான சட்டங்களை கொண்டுள்ள வடகொரியாவில் உள்ள பெண்கள் அதிக குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டும் என அந்த நாட்டின் ஜனாதிபதி கிம்ஜாங் உன் மேடையிலேயே கண்கலங்கி அழுதுள்ளார்.

உலகில் மர்ம தேசமென அழைக்கப்படும் நாடுளில் ஒன்று வடகொரியா. இந்த நாட்டின் ஜனாதிபதி கிம்ஜாங் உன் உள்ளார்.

கிம்ஜாங் உன் சர்வாதிகாரி போல் அந்த நாட்டை ஆட்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நாட்டின் மக்கள்தொகை என்பது 2.61 கோடி மட்டும் தான் என கூறப்படுகிறது.

இந்நிலையில், தனது நாட்டில் உள்ள பெண்கள் அதிகமாக குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்று கூறி மேடையில் கிம்ஜாங் உன் கண்கலங்கியுள்ளார்.

வடகொரியாவில் தற்போது குழந்தை பிறப்பு விகிதம் சரிந்து வரும் நிலையில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தலைநகர் பியாக்யாங்கில் நடந்த பெண்களுக்கான நிகழ்ச்சியில் அவர் தெரிவித்ததாவது,

நம் நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இதனால் பெண்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதுதான் நம் நாட்டை பாதுகாக்கும். பிறப்பு விகிதம் குறைவதைத் தடுப்பது மட்டுமின்றி குழந்தைகளைப் பராமரித்து நன்றாக வளர்க்க வேண்டும்.

முறையாகக் கல்வி வழங்க வேண்டும். இதனை செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என தெரிவித்தார்.

எனக்கு நடந்த துரோகம்.. நிறைய ஏமாந்துவிட்டேன்.

இந்த கணொளி தற்போது இணையதளத்தில் வெளியாகி வேகமாகப் பரவி வருகிறது.

வடகொரியாவைப் பொறுத்தவரையில் 1970-80 காலகட்டத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. இதற்காகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதற்கிடையே தான் கடந்த 1990ல் இருப்பினும், 1990ல் கடும் பஞ்சம் ஏற்பட்டு ஏராளமானவர்கள் பலியானார்கள். இதையடுத்து அந்த நாட்டில் மக்கள்தொகை என்பது மேலும் சரியத் தொடங்கியது.

இதையடுத்து தான் சமீபத்தில் பெண்கள் 3 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என கிம்ஜாங் உன் தெரிவித்ததோடு, அந்த பெண்களுக்கா இலவச வீடு, மானியங்கள், இலவச உணவு, மருந்து மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்கள், குழந்தைகளுக்கான கல்விச் சலுகைகள் உள்ளிட்டவை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின்படி நடப்பு ஆண்டில் வடகொரியா பெண்களிடம் குழந்தை பிறப்பு சராசரி என்பது 1.8 என்ற அளவில் உள்ளது. இது வடகொரியாவின் அண்டை நாடுகளை விட அதிகம் தான். இருப்பினும் பெண்கள் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என கிம்ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

# மகனின் குழந்தையை வயிற்றில் சுமந்த தாய்



ஒரு குழந்தையின் வாழ்க்கையில் தாத்தா, பாட்டியின் பங்கு மிகவும் முக்கியமானது. ஒரு குடும்பத்தில், தாத்தா-பாட்டி தங்கள் பேரன் பேத்திகளுக்கு கதைகள் சொல்கிறார்கள், தாலாட்டுப் பாடுகிறார்கள், மாறி மாறி தங்கள் பேரக்குழந்தைகளை மகிழ்விக்கிறார்கள். ஆனால், இந்த சம்பவம் இவை அனைத்திலிருந்தும் வித்தியாசமானது.

அமெரிக்காவின் உட்டா மாகாணத்தில் பாட் எயானவர் தனது பேரக்குழந்தையை பெற்றெடுத்துள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் கவனம் பெற்று வருகின்றன. நான்சி ஹேக் என்ற பெண்ணுக்கு ஜெஃப் என்ற மகனும், கேம்ப்ரியா என்ற மருமகளும் உள்ளனர்.

மருமகள் கேம்பரியாவால் கருத்தரிக்க முடியாத நிலையில், அவருக்காக வாடகைத் தாயாக நான்சி மாறியுள்ளார்.

இவருக்கு ஹன்னா என்ற அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.

தனது மகன் மற்றும் மருமகள் குழந்தைக்காக ஏங்கியது தனக்கு வருத்த அளித்ததாக தெரிவித்த நான்சி, அவர்கள் மகிழ்ச்சிக்காக இந்த முடிவை எடுத்ததாக கூறியுள்ளார். நான்சி தனது மகன் மற்றும் மருமகளுடன் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார். சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் நான்சி தனது குடும்பத்தினருடன் பல புகைப்படங்களை பகிர்ந்து வருகிறார். இந்த குடும்பம் மக்கள் மத்தியில் தொடர்ந்து பேசப்படுகிறது.

அகமதாபாத்:

# ஒரு இலட்சம் இருந்தும் சாப்பிடாது மரணித்த யாசகர்



குஜராத் மாநிலத்தில் பிச்சைக்காரர் ஒருவர் உணவுக்கே வழியில்லாமல் பரிதாபமாக உயிரிழந்த சோகம் நடந்துள்ளது. ஆனால், அவரிடம் கத்தை கத்தையாக ஒரு இலட்சத்து 14ஆயிரம் ரூபாய் பணம் இருந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவரது பெயர் உள்ளிட்ட தகவல்கள் இதுவரை உறுதியாகவில்லை, இருப்பினும், அவரது மரணம் அப்பகுதியில் உள்ள பொலிஸார் இடையே பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

50 வயதான அந்த நபர் வல்சாத் என்ற அந்த பகுதியில் யாசகம் செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. உணவு இல்லாமல் அவரது உடல்நிலை கடந்த சில நாட்களாக ரொம்பவே மோசமாகி இருந்துள்ளது. தகவலறிந்து அவரை மீட்ட பொலிஸார், வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், சிகிச்சை பலனின்றி யாசகர் மரணமடைந்துள்ளார்.

# 100 வயது மூதாட்டி சபரி மலையில் யாத்திரை



கேரளாவை சேர்ந்த, 100 வயதைக் கடந்த மூதாட்டி, கன்னி சாமியாக விரதமிருந்து, மலையேறி, சபரிமலை ஐயப்பன் கோயிலில் சாமி தரிசனம் செய்துள்ளார்.

"பதினெட்டாம் படியில் ஏறிச்சென்று பொன்னம்பலத்தைப் பார்த்தேன். என் பகவானைப் பார்த்தபோது கண்ணும், மனதும் நிறைந்துவிட்டன" என்று அவர் பரவசத்துடன் தெரிவித்துள்ளார்.

தனது பேரன் கிரீஷ், பிள்ளைகளான அம்ருதேஷ், அன்விதா, அவந்திகா என 14 பேருடன் இருமுடி கட்டி மும்பைக்கு வந்தார். அங்கிருந்து டோலி மூலம் சபரிமலை சன்னிதானம் சென்றார் பாருக்குட்டி அம்மா. மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக ஐயப்ப சுவாமியை தரிசித்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

100 வயதை கடந்து ஐயப்பனை தரிசித்த அந்த மூதாட்டிக்கு தேவசம்போர்டு சார்பில் சால்வை அணிவித்து மரியாதை அளிக்கப்பட்டுள்ளது.

# பனி மூட்டத்தால் வானில் வட்டம் அடித்த விமானங்கள்



"மிக்ஜான்" புயல் மற்றும் கனமழையால் சென்னை விமான நிலையம் நீர் நிலையம் போன்று காட்சி அளித்தது. விமான நிலையத்திற்குள் வெள்ளம் புகுந்ததால், விமானச் சேவைகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளன. வெள்ளம் வெளியேற்றப்பட்ட நிலையில், விமானச் சேவைகள் படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளன.

இந்நிலையில், மீண்டும் பனி மூட்டம் காரணமாக சென்னையில் விமானச் சேவை முடங்கியுள்ளது. குறிப்பாக உள்நாட்டு விமானங்கள் தாமதமாகப் புறப்பட்டன. தரையிறங்க வேண்டிய விமானங்களோ வானில் வட்டம் அடித்தபடியே சுற்றியுள்ளன.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வில்லாவிடம் வீழ்ந்தது சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் வியாழக்கழிமை (07) அதிகாலை நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.

வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை லியோன் பெய்லி பெற்றிருந்தார்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற செல்சியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் வென்றது. யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஸ்கொட் மக்டொமினி பெற்றதோடு, செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை கோல் பல்மர் பெற்றிருந்தார்.





இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின்

# தரவரிசையில் பிஷ்னோய் முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியா ரவி பிஷ்னோய் முன்னேறியுள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ரவி பிஷ்னோய், 2. ரஷீட் கான், 3. அடில் ரஷீட், வனிடு ஹஸரங்க, 5. மகேஷ் தீக்‌ஷன, 6. சாம் கர்ரன், 7. பஸல்ஹக் பரூக்கி, 8. முஜீப் உர் ரஹ்மான், 9. அகீல் ஹொஸைன், 10. அன்றிச் நொர்கியா.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. சூரியகுமார் யாதவ், 2. மொஹமட் றிஸ்வான், 3. ஏய்டன் மார்க்ரம், 4. பாபர் அஸாம், 5. றீலி றொஸோ, 6. டேவிட் மலன், 7. ருத்துராஜ் கைகவாட், 8. ஜொஸ் பட்லர், 9. றீஸா ஹென்ட்றிக்ஸ், 10. கிளென் பிலிப்ஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. ஹர்டிக் பாண்டியா, 4. ஏய்டன் மார்க்ரம், 5. மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.

இதேவேளை, டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் ஏழாமிடத்துக்கு நியூசிலாந்தின் டரைல் மிற்செல் முன்னேறியுள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. கேன் வில்லியம்ஸன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. பாபர் அஸாம், 5. மர்னுஸ் லபுஷைன், 6. ட்ரெவிஸ் ஹெட், 7. டரைல் மிற்செல், 8. உஸ்மான் கவாஜா, 9. ஹரி ப்ரூக், 10. றோஹித் ஷர்மா.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. இரவிச்சந்திரன் அஷ்வின், 2. ககிஸோ றபாடா, 3. இரவீந்திர ஜடேஜா, 4. பற் கமின்ஸ், 5. ஷகீன் ஷா அஃப்ரிடி, ஒலி றொபின்ஸன், 7. ஜேம்ஸ் அன்டர்சன், 8. நேதன் லையன், 9. பிரபாத் ஜெயசூரிய, 10. மிற்செல் ஸ்டார்க்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1. இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.

ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப்பில்

# வெண்கலப் பதக்கம் வென்றார் ஜெயக்குமார்


ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட விளையாட்டு பயிற்றுநராக கடமையாற்றும் பஞ்சாட்சரம் ஜெயக்குமார் ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப்பில் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

55 வயது முதல் 59 வயதுக்குட்பட்டவர்களுக்கான கோலூன்றிப் பாய்தலிலேயே ஜெயக்குமார் கலந்துகொண்டு 2.3 மீற்றர் உயரத்தைக் கடந்து வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கையிலிருந்து 147 வீர, வீராங்கனைகள் பங்குபற்றியதில் 84 பதக்கங்களை தனதாக்கி கொண்டமை சிறப்பம்சமாகும். 25 பேர் தங்கப் பதக்கத்தையும் மற்றும் 34 பேர் வெள்ளிப் பதக்கத்தையும், 25 பேர் வெண்கலப்பதக்கத்தையும் வெற்றி பெற்று இலங்கை அணியானது எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்நிகழ்வில் தான் பெற்றுக்கொண்ட அனுபவம் தொடர்பாகவும், மாவட்டத்தில் கோலூன்றிப் பாய்தலை இளைஞர்களுக்கு பயிற்றுவிப்பதற்காக தான் தயாராக இருப்பதாகவும் ஜெயக்குமார் தெரிவித்தார்.



இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், அன்டிகுவாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகள்: 202/10 (39.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ஷே ஹோப் 68 (68), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட் 63 (80) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 3/33, லியாம் லிவிங்ஸ்டோன் 3/39, குஸ் அட்கின்ஸன் 2/28, றெஹான் அஹ்மட் 2/40)





இங்கிலாந்து: 206/4 (32.5 ஓவ.) (துடுப்பாட்டம்: வில் ஜக்ஸ் 73 (72), ஜொஸ் பட்லர் ஆ.இ 58 (45), ஹரி ப்ரூக் 43 (49) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 2/34, ஷெர்பேன் ருதஃபோர்ட் 1/24, றொமாறியோ ஷெப்பர்ட் 1/27)

போட்டியின் நாயகன்: சாம் கர்ரன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 08 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.